செ.வெ.எண். 66/பிப்ரவரி தேதி : 24.02.2017

**தருமபுரி மாவட்டம்**

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (24-02-2017) நடைபெற்றது.

வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல், வேளாண் அறிவியல் மையம், கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண்மை விற்பனைத்துறை மூலம் விவசாயிகள் பார்வையிடும் வண்ணம் கருத்துக்கண்காட்சியை பார்வையிட்டு பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரண நிதி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டு பருவத்தில் பயிர் சாகுபடி செய்து அறுவடை செய்து தற்போது தரிசாக உள்ள நிலங்கள் முழுமையாக கணக்கீடு செய்து வறட்சி நிவாரண நிதி வழங்கப்படும். மேலும் நமது மாவட்டத்தில் கடுமையான வறட்சியின் காரணமாக கால்நடைகளுக்கு மற்றும் மக்களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மொரப்பூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு அனுமதி வழங்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேபோல் நமது மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர் கடன், விவசாய கடன்கள் பெறுதவதற்கான விண்ணப்பம் வழங்கப்பட்டு வருகிறது. வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாய பயிர்களின் நகை கடன் வட்டி மற்றும் கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி செய்வதற்கு விவசாயிகளின் கோரிக்கையை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. கடுமையான வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கால்நடைகளுக்கு அரசு மானிய தொகையில் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வாணியாறு அணையிலிருந்து விவசாய மற்றும் கால்நடைகளுக்கு குடிநீர் பயன்பாட்டிற்காக தண்ணீர் திறந்து விட மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், மேலும் நமது மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் அண்ணாவாரி சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. 24-02-2017 இன்று வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற காணொலிக் காட்சியில் முன் பருவத்தில் பயிர் செய்து தற்போது தரிசாக உள்ள விவசாய நிலங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

தருமபுரி மாவட்டத்தில் வறட்சியின் காரணமாக மொரப்பூர் மற்றும் பா்பிரெட்டிப்பட்டி வட்டாரத்தில் குடிநீர் தட்டுபாடு குறித்து ஆழ்துளைக் கிணறு அமைக்க செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை ஆய்வுக் குழு அமைத்து வரும் திங்கள்கிழமைக்குள் அனுமதி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும், நமது மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் சார்பில் தருமபுரி மற்றும் அரூர் கோட்டங்களில் மாதத்தின் 2வது வெள்ளிக்கிழமையில் பயிர்க் கடன் தொடர்பான குறைதீர்க் கூட்டம் நடைபெற உள்ளது. இக் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலும் விவசாயிகளின் பயிர்க் கடன் விண்ணப்பம் அனைவரிடமும் பெறப்பட்டு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். மேலும் அவ்விண்ணப்பங்கள் மூதுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதியான விண்ணப்பங்களுக்கு விரைவில் பயிர்க் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும் வேண்டும் எனவும், சம்மந்தப்பட்ட துறை அலுவலர் அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மவாட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) திரு. பஷீர், மாவட்ட ஊரலக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) (ம) திருமதி ரா.ரா. சுசீலா, தனி அலுவலர், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைதிருமதி துர்க்கா மூர்த்தி, தனி அலுவலர், சுப்ரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலை திருமதி கவிதா, துணைபதிவாளர், கூட்டுறவுத்துறை, திரு ஆர். பழனிசாமி, கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி கவிதா, முன்னோடி வங்கி மேலாளர்திரு முத்தரசு, பவர்கிரிட்

நிறுவன பொறியாளர் திரு ஜெயபிரகாஷ், வேளாண்மைத்துறை அலுவலர்களும், சகோதரத்துறை அலுவலர்களும், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.